# Kanchipuram Dt

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி    மதிப்பெண்கள் : 50

I. பலவுள் தெரிக. 8 x 1 = 8

1. பொருத்துக.

அ) ஆமந்திரிகை - 1) பட்டத்து யானை

ஆ) அரசு உவா - 2) மூங்கில்

இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்

ஈ) கழை - 4) எடை அளவு

அ) 3 1 4 2    ஆ) 4 2 1 3    இ) 1 2 3 4    ஈ) 4 3 2 1

2. வேறுபட்டதைக் குறிப்பிடுக

அ) அண்மைக் காட்சித்துணிப்பு    ஆ) சேய்மைக் காட்சித்துணிப்பு

இ) நடுக்காட்சித்துணிப்பு    ஈ) காட்சி மறைவு

3. திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர்    ஆ) மன உறுதியுடையவர்

இ) தீக்காய்வார்    ஈ) அறிவினார்

4. ஆராய்ந்து சொல்கிறவர்

அ) அரசர்    ஆ) சொல்லியபடி செய்பவர்

இ) தூதுவர்    ஈ) உறவினர்

5. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்

ஆ) மனத்திட்பம் உடையவர்

இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

6. 'சாப விமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு.அழகிரிசாமி    ஆ) புதுமைப்பித்தன்

இ) ஜெயமோகன்    ஈ) எஸ்.இராமகிருஷ்ணன்

7. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம் எது?

அ) உண்டு    ஆ) பிறந்த    இ) வளர்ந்த    ஈ) இடந்தனில்

8. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது

ஆ) தனக்கும் பயன்படாது, பிறர்க்கும் பயன்படாது

இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

II. எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4 x 2 = 8

9. வறுமையும் சிறுமையும் தருவது எது?

10. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

11. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.

12. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
13. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
14. பெருந்தேர் - புணர்ச்சி விதி கூறுக.

III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3x4=12

15. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும், பொருளையும் பொருத்தி விளக்குக.
16. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
17. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
18. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.
19. தொழில் உவமை அணியை சான்றுடன் விளக்குக.

IV. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

20. *பொருள் வேறுபாடு அறிந்து தொடரமைக்க.*
    அ) ஊண் - ஊன் *(அல்லது)* ஆ) புல் - புள்
21. *கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.*
    குதிரை, வேகம், ஓடு, தாவு
22. *தொடரில் இடம் பெற்ற மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.*
    அ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
    ஆ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.
23. *ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக.*
    அ) ஓரீஇ *(அல்லது)* ஆ) சொல்லுதல்
24. *கலைச்சொல்லாக்கம் தருக :*
    அ) Animation ஆ) Internet Banking

V. பெருவினா (அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக) 2x5=10

25. அ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையில் கட்டுரையாக்குக.

    *(அல்லது)*

    ஆ) உங்கள் ஊர்ப்பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.
26. அ) சங்க கால வரலாற்றை அறிந்து கொள்ள புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

    *(அல்லது)*

    ஆ) நிருவாக மேலாண்மை குறித்த வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

27. அ) 'காய்நெல் அறுத்துக் ..........' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.
    ஆ) 'நோய்' என முடியும் குறள்.

******